## வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

**அசல் வழக்கு எண்.48/2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி: 1**

பெயர்: விஸ்வநாதன் (பி.வா.சா. 1) நாள்: 24.02.2026

த.பெ:

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ராமகிருஷ்ணன், அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 – குறுக்கு விசாரணை (வாதி தரப்பு):–**

நான் B.Sc வரை படித்துள்ளேன். நான் பாதுகாப்பு துறையில் இருந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் குடியிருந்து வருகிறேன். எனது பூர்வீகம் கொடுமுடி ஆகும். வாதி மகேஷ் என்பவர் எனது சொந்த தம்பி ஆவார். எங்களுடைய குடும்பத்தில் மூன்று சகோதரர்கள், இரண்டு சகோதரிகள் உள்ளனர். வாதியும் தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் பணியில் உள்ளார். தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்து எனக்கும் கிரய வகையில் பாத்தியப்பட்டது, தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்து வாதியும் கிரயம் பெற்ற வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என்பது வீடு, மற்றும் தடத்தினை உள்ளடக்கியது என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் வழக்கு காலத்திற்கு முன்பு நேசமான உறவு இருந்தது என்றால் சரிதான். வழக்கு ஆரம்பிக்கும் காலத்திலிருந்து நேசமான உறவு இல்லை.

2. தாவா வீடு என்பது கொடுமுடி கிராமம் நத்தத்திற்கு கட்டுப்பட்ட இடம் என்றால் சரிதான். வழக்கு சொத்தினுடைய நத்தம் சர்வே எண்.849/1 என்றால் ஞாபகம் இல்லை. ரி.ச.எண்.302 ஆகும். தாவா சொத்து வீட்டிற்கு மேபுறம் தென்வடலாக பாதை செல்கிறது என்றால் சரிதான். மேற்படி பாதை தென்புறம் மணிகூண்டில் ஆரம்பித்து SSV பள்ளிகூடம் வரை செல்கிறது என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா இரண்டாவது இன சொத்திற்கு கிழபுறமாக எனக்கும், ராம்குமார் மற்றும் வாதிக்கு பாத்தியப்பட்ட காலி இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:10:16 +0530

சொத்திற்கு வடபுறமாக எட்டியப்பன் ஆசிரியருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புறம் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த தென்புறம் உள்ள வீடு எனக்கும், ராம்குமார் மற்றும் வாதிக்கு கிரய வகையில் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி வீடு தென்புறம் உள்ள வீடு 2007ம் ஆண்டு கிரயம் பெறப்பட்டது.

3. வழக்கு சொத்தான வீடு பழைய காலத்து மெட்ராஸ் தார்சு வீடு என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தான வீடும், எனக்கு பாத்தியப்பட்ட வீடும், ஆரம்பத்தில் KNR ராமசந்திர ஐயர் மகளான அமரர் ராமமூர்த்தி மனைவி R. ஜானகி, KNR ராமசந்திர ஐயர் மகன் K.R.சந்திரசேகர், KNR ராமசந்திர ஐயர் மகளான ஹேமாவதி என்கிற ஹேமாவதிகிருஷ்ணனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் 18.01.2013ம் தேதியில் கொடுமுடி சார் பதிவக ஆவண எண்.85/2013ன் படி பாகபிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு செய்துகொண்ட பாகபிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்களை நான் ஒத்துக்கொள்கிறேன், அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை படித்து சரிபார்த்து தான் அதில் A– schedule சொத்தை நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள B மற்றும் C Schedule சொத்துக்களை வாதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அந்த மூலபத்திரத்தில் உள்ள சரத்துக்கள் அனைத்தும் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். அந்த மூலபத்திரத்தில் கண்டுள்ள சரத்துக்கள் மற்றும் உரிமைகள் வாதியை கட்டுப்படுத்தும், வாதிக்கும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். மேற்படி A– schedule சொத்து என்பது தென்வடல் ரோட்டை ஒட்டி கிழபுறம் உள்ள முதல் பகுதி என்றால் சரிதான். B– schedule சொத்து K.R.சந்திரசேகரனுக்கு ஒதுக்கப்பட்டது, C– schedule சொத்து ஹேமாவதி என்கிற ஹேமாவதி கிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த B மற்றும் C Schedule சொத்து நான் கிரயம் பெற்ற இடத்திற்கு கிழபுறமாக உள்ள பகுதி என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:10:20 +0530

5. A– schedule சொத்துக்களின் வழியாக சென்று தான் B மற்றும் C Schedule சொத்துக்களுக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். அந்த B மற்றும் C Schedule சொத்துக்களை வாதி 29.07.2013ம் தேதி கொடுமுடி சார்பதிவக கிரய ஆவண எண்.1297/2013ன் படி கிரயம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாதி கிரயம் வாங்கியது எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த தாவா எதிருரை வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்து அதற்கு பின்னிட்ட எனது ஆலோசனையின் பேரில் தான் தாவா பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம்பெற்ற முன் பகுதி சொத்தில் 04–043009213ன் படி மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான், அது சந்திரசேகரன் பெயரில் உள்ளது. மேற்படி மின் இணைப்பை தான் A, B, C Schedule தாரர்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அது பாகபிரிவினை வரை அனுபவித்து வந்து அதற்கு பின்னிட்டு B மற்றும் C Schedule தாரர்கள் தனித்தனியாக அவரவர் பெயரில் தனியாக மின் இணைப்புபெறும் வரை மேற்படி பொது மின்இணைப்பை பயன்படுத்திக்கொள்வது என்றும், தனியாக மின் இணைப்பு பெற்ற பின்னிட்டு அந்த பொது மின்இணைப்பை B மற்றும் C Schedule தாரர்கள் பயன்படுத்த கூடாது என்ற பாகபிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்கள் படி B மற்றும் C Schedule தாரர்கள் தனித்தனியாக மின்இணைப்பு பெற்றுகொண்டுவிட்டபடியால் A Scheduleலில் கண்ட தனிப்பட்ட முறையில் எனக்கு பாத்தியப்பட்ட மின்இணைப்பை B மற்றும் C Schedule தாரர்கள் பயன்படுத்துவதில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி பாகபிரிவினை செய்து கொண்ட காலத்தில் B மற்றும் C Schedule தாரர்கள் உடனடியாக மின்இணைப்பை பெறமுடியாது என்ற காரணத்தினால் ஒரு தற்காலிக ஏற்பாடாக அவ்வாறு A Scheduleலில் உள்ள மின்இணைப்பை B மற்றும் C Schedule தாரர்கள் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.24 09:10:25 +0530

**மறுவிசாரணை :–இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:10:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.